## ★ கொழும்பில் புதிய சமாதான முயற்சியாம்?

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 18 இதழ் 236
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 4 — 10 — 1992

## தமிழ் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் நடந்துவரும் சண்டை இவ்வருடம் நவம்பர் மாதம்முதல் ஓய்ந்துவிடுமென உயர்நிலை வட்டாரங்கள் தெரிவித்ததாக 'தமிழ்பத்திரிகை' ஒன்று செய்தி வெளியிட்டுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## அநுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதி 'வேட்பாளர்

(கொழும்பு)

அடுத்து நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அதன் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவே பெரும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அச்சத்தின் மத்தியில் மடு அகதிகள்

(மன்னார்)

மடு அகதிமுகாமில் தங்கியுள்ள அகதிகள், ராணுவம் எதிர் ராணுவ நடவடிக்கை இப் பகுதியில் நடத்தக்கூடும் என்ற அச்சத்தில் வாழ்கின்றனர். மன்னாரில் ராணுவ நடவ

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ வடக்கு - கிழக்கில்

# இராணுவ தாக்குதல் தொடரும்

# ராவுக்கு - பிரேமா தெரிவிப்பு!

## மக்களின் பாதுகாப்பிற்கு அவசியமாம்

(புதுடில்லி)

இலங்கையின் வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடாத்தப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட மாட்டாது. அது அவசியமாகிறது என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவுக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை திரு. நரசிம்மராவைச் சந்தித்தபோதே திரு. பிரேமதாஸா இவ்வாறு தெரிவித்ததாக 'பி.ரி.ஐ' தெரிவித்தது.

திரு. பிரேமதாஸா மேலும் கூறுகையில்: இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு எல்லா அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ தளபதிகள் பலாலி விஜயம்

(கொழும்பு)

இராணுவ தளபதி ஜெனரல் சிசில் வைத்தியாரத்ன உயர் அதிகாரிகள் சகிதம நேற்றுக்காலை பலாலி இராணுவ முகாம் வந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டைக்காடு பகுதியில் நேற்றுமுன்தினம்புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதலை அடுத்தே தளபதியும் உயர் இராணுவ அதிகாரிகளும் பலாலி வந்துள்ளதாக கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## 'ஒபரேஷன் வேக அதிரடி' மன்னாரில் பூர்த்தி

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 4 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட "ஒபரேசன் வேக அதிரடி" இராணுவ நடவடிக்கை நேற்றுடன் பூர்த்தியடைந்துள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் போது இரு படையினர் உயிரிழந்ததுடன் 12 படையினர் காயமடைந்துள்ளனர். முப்படைகளும் பெருமெடுப்பில் இத்தாக்குதலில் ஈடுபட்டதாகவும் கூட்டுப்படைத்

(4ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை இந்தியா அனுப்ப இலங்கை ஆவன செய்யும்

### - பிரேமா

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகத்திற்கு உள்ளாகி இருக்கும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் விடயம் திரு. நரசிம்மராவுக்கும், திரு. பிரேமதாசாவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் முக்கிய இடம் வகித்ததாம்.

திரு. பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்புவது சம்பந்தமாக ஆவன செய்வதாகப் பிரேமதாசா கூறியதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது

மேற்படி விடயம் குறித்து இரு தரப்பும் பேசித் தீர்க்குமென நேற்று முன்தினம் திரு.

(4ம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவை பதவி நீக்க ஆளுநருடன் இன்று சந்திப்பு

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைப் பதவியிலிருந்து விலக்குவதற்கு அமைக்கப்பட்ட குழு அவர் பற்றிய குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்துள்ளது

★ ஆட்சியையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி ஏராளமான பணம் சேர்த்தமை,

★ சட்ட விரோதமாகப்பத்திரிகைச் சுதந்திரத்தைத் தடை செய்தமை,

★ அதிகாரிகளை அச்சுறுத்தியமை,

★ மாநிலத்தில் சட்டம்,

(4ம் பக்கம் பார்க்க)

## சொந்த இடம்திரும்ப அகதிகளுக்கு அனுமதி மறுப்பு

(திருகோணமலை)

இந்தியாவில் இருந்துவரும் அகதுகளால் உப்புவெளி அகதி முகாம் நிரம்பிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பழைய உணவுக்களஞ்சியம் ஒன்றுக்கு அகதிகள் மாற்றப்பட்டுவருகின்றனர்.

செட்டிகுளத்தைச் சேர்ந்த தமிழ்க் குடும்பங்கள் அவர்கள் விருப்பத்துக்கு மாறாக சிங்களவர்களினதும் இராணுவத்தினரின் அச்சுறுத்தல் நிரம்பிய செட்டிகுளத்துக்கு அனுப்பி

(4-ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர் ராஜாராம் அ.தி.மு.க.விலிருந்து நீக்கம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையின் முன்னாள் தலைவரும் முன்னாள் மாநில அமைச்சருமான கே. ராஜாராம் அ. தி. மு. க. விலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமியால் முதலமைச்சர்செல்வி ஜெயலலிதா மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைக் கண்டறிய அமைக்கப்பட்டிருக்கும் குழுவின் உறுப்பினராக இருக்கத் தாம் இணங்கியிருப்பதாக ராஜாராம் செய்தியாளர் மத்தியில் தெரிவித்த கருத்தையடுத்தே அவர்மேல் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. க.வின் பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா நேற்றுச் சென்னையல் வெளியிட்டிருக்கும் அறிக்கை

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை தவறு; அரசியல்தீர்வே உறுதியானது

### - பீற்றர் கெனமன் கூறுகிறார்

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் ஒருபோதும் தீர்வுகாண முடியாது. அரசியல் தீர்வே நாட்டுக்கு முழுமையான விமோசனத்தைத் தரும்"

இவ்வாறு இலங்கையின் பழம்பெரும் அரசியல்வாதியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான திரு பீட்டர் கெனமன் தனது பிறந்த தினவைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் இன்று ஒரு சிவில் யுத்தமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு கண்டுவிட முடியுமென சிலர் கருதுகின்றனர். இது தவறானதொரு கணிப்பு பிரச்னையை தீர்க்க அரசியல்தீர்வே முடிவானது என்றார் (க-சி)

## பிரேமா டாக்கா விஜயம்

(கொழும்பு)

சிறிலங்காஜனாதிபதி பிரேமதாசா மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று ஞாயிற்றுக்கிழமை பங்களாதேஷ் புறப்படுகிறார்.

இதேவேளை ஜனாதிபதி குழுவினர் நேற்று பூட்டான் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

இயற்கை வளம் எங்கள் செல்வம் - அதை
இயன்றமட்டும் பேணுவோம் வாரீர்

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

அலுமாரி, புத்தக அலுமாரி சோகேஸ், மேசை, சாப்பாட்டு மேசை, தையல் மெஷின் கட்டில்கள், மெத்தைகள் கதிரை செற்றிகள், கந்தோர் மேசை கதிரை, குஷன் செற்றிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 07, கைலாசபிள்ளையார் கோவிலின் வீதி, நல்லூர். (சி-6851)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தரி நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ் ரி மெடிக்கல்ஸ், 490 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (சி-6669)

### கர்நாடக சங்கீதம்

சங்கீத ஆசிரியர் மாணவரி யாவருக்கும் உகந்த "கர்நாடக சங்கீதம் கையேடு 1" ஒன்றின் விலை ரூபா 10/- மட்டுமே எல்லா புத்தக விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும். (ஏ-2476)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலயியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள்; மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (சி-6855)

### அனுமதிப் பரீட்சை (ஆண்டு 6)

ஆண்டு 5-ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப்பரீட்சை (தமிழ். கணிதம், ஆங்கிலம்) 04-10-92 ஞாயிறு மு ப. 8-00, ம. ப 11 நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம், புதியகல்விநிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6853)

### நீமியா உரம்

நீமியா உரம் பாவனையால் நைதரசன் விரயம் தடுக்கப்படுகிறது. அடிக்கட்டு உரம் கரைந்தோ, நீராவியாகவோ விரயமாவதில்லை. விளைச்சல் அதிகரிக்கிறது. கிலோ பக்கற் விலை ரூபா 15/- மட்டுமே. 20 கிலோ பக்கற் ரூபா 260/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற். யாழ்ப்பாணம். (எ 2479)

### குரு மாற்றம்

பாட நூல்கள், C/R,—அப்பியாசக் கொப்பிகள், மைவகைகள், பென்சில்கள், பேனைக்கள், பாடசாலை,—அலுவலக உபகரணங்களும், (Prof) சத்தியதாஸனின் வியாழ மாற்றமும். கிடைக்குமிடங்கள்: மொடர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடிச்சந்தி சோபிதா, பூபாலசிங்கம் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-6850)

### A/L பௌதீகவியல்

பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் தனிப்பட்ட முறையில் (Individual Class) சிறப்பாக ஏராளமான பயிற்சிகளோடு பல்லாண்டுகள் அனுபவம் பெற்ற ஆசிரியரால் கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம் B Sc. (Cey) Dip. in. Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-6860)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## அடகு நகை மீளப்பெறுதல்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் மக்கள் வங்கியில் உள்ள ஆவணங்கள் யுத்தம் காரணமாக அழிந்து போயுள்ளதால், இவ்வங்கியில் அடைவு வைத்தவர்களின் விபரங்கள், ஆவணங்களைப் புனரமைப்பதற்கும், அடைவு நகைகளை மீளளிப்பதற்கும் அவசியம் தேவைப்படுவதாக மக்கள் வங்கியின் யாழ் பிரதேச தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இக்கிளையில் அடைவு வைத்து பணம் செலுத்திய வர்கள்/செலுத்தாதவர்கள் தம்மிடமுள்ள பற்றுச் சீட்டுகளுடன் மாங்குளம் கிளை முகாமையாளரை நேரில் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாங்குளம் கிளை, தற்காலிகமாகத் துணுக்காய் ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தில் இயங்கி வருகின்றதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

* * *

மக்கள் வங்கி கிளிநொச்சிக் கிளையின் அடைவு நகைகள் மீளளிப்பு வேலைகள் இல. 220, டீன்ஸ் வீதி, பார்மேஸ் கட்டிடம், கொழும்பு-10 முகவரியில் உள்ள மக்கள் வங்கி யாழ். பிரதேச அடைவு மீளல் விசேட பிரிவில் நடைபெறுகின்றன.

அடைவு நகைக்குரிய பணத்தைச் செலுத்தியவர்கள் மேற்படி முகவரியில் தமது நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என மக்கள் வங்கியின் யாழ். பிரதேச தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது

அடைவு நகைகளுக்குபணம் செலுத்தாதிருப்பவர்களும் கிளிநொச்சி கிளையிலோ அல்லது கொழும்பிலுள்ள மேற்படி பிரிவிலோ பணத்தைசெலுத்தி நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

அடைவு நகைக்குப் பணம் செலுத்தியவர்கள் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமைகளில் மேற்கூறிய விசேட பிரிவுடன் நேரில் தொடர்பு கொண்டு வியாழக்கிழமைகளில் நகைகளை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு சென்று அடைவு நகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பவர்கள் தமது பிரதிநிதியாக ஒருவரை அனுப்பி இவற்றைப்பெற்றுக் கொள்ளமுடியும். இதற்குரிய அதிகாரமளிக்கும் படிவத்தை கிளிநொச்சிக்கிளை முகாமையாளரைச் சந்தித்து செய்துகொள்ளல்வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## கூறுவிலை கோரல்

### நவீன கள்ளுச்சாலை அமைத்தல்

மேற்படி கள்ளுச்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பில் கூறுவிலை ஒன்றை கட்டிட தொழில் நிறுவனங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். கட்டிட வடிவமைப்புக்களை இல. 499, காங்கேசன் துறை வீதியில் உள்ள வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாச அலுவலகத்தில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 10-10-92 ஆகும்.

பொது முகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
இல; 499, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(எ 2486)


## பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்வது குறித்து மத்திய அரசு பரிசீலிக்கிறது — எஸ். பி. சவான்

(புதுடில்லி)

பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்வது குறித்தான தமிழக அரசின் வேண்டுகோளை மத்திய அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்சியை தடை செய்யுமாறு கோரி தமிழக முதல்வர் மத்திய அரசுக்கு கடிதம்அனுப்பியுள்ளது தெரிந்ததே. (க)

## புத்தகாயாவில் 100 வீடுகளைக் கட்ட இலங்கை அரசு உதவும்

[புதுடில்லி]

புத்தகாயாவில் உள்ள ஏழை மக்களுக்கு 100 வீடுகளை இலங்கை அரசு கட்டித்தரவுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

புத்தகாயாவில் நேற்றுமுன் தினம் மாலை பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்று கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மேற்படி வீடுகளை அமைப்பதற்கு பீகார் அரசுக்கு நன்கொடை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## ஒய்வூதிய அடையாள அட்டை செயலகத்தால் வழங்கப்படும்

(மானிப்பாய்)

விதவைகள் அனாதைகள் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கான அடையாள அட்டைகள் தற்போது யாழ் செயலகத்தினால்வழங்கப்படுகிறது

இதற்கான அதிகாரத்தை யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு ஒய்வூதியத்திணைக்களப் பணிப்பாளர் வழங்கியுள்ளார்

இதுவரை காலமும் விதவைகள் அனாதைகள் ஒய்வூதியம் பெறுபவர்களது அடையாள அட்டைகள் யாழ் செயலக ஒய்வூதியப் பிரிவினால் கொழும்பிலுள்ள ஒய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. மீண்டும் இவை யாழ்ப்பாணம் வந்துசேர்வதற்கு பலமாதங்கள் பிடித்தன.

இக்காலதாமதத்தைப் போக்குவதற்காக யாழ். அரச அதிபர் ஒய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து இவற்றை யாழ்ப்பாணத்தில வைத்து வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் நூற்றுக்கணக்கான அடையாள அட்டைகள் அரச அதிபரினால் தற்போது கையொப்பமிடப்பட்டு யாழ் ஒய்வூதியப் பிரிவில் கையளிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்குரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு ஒய்வூதியப் பிரிவினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (71)


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி





**அமரர்கள்**

திரு. கந்தையா ஜீவரட்ணம் (குமார்)
(வ. பி. போ. ச. மினிபஸ் சாரதி)

திருமதி சுமதி ஜீவரட்ணம்

அன்னையின் மடியில்: 17-07-1960 ★

ஆண்டவன் அடியில்: 28-09-1990

திதி: 04-10-1992

காவியத்தைப் பாடுவதற்கு கவிதைகள் பல உண்டு
உங்கள் காவியத்தைப் பாடுவதற்கு எம் கண்ணீரே உண்டு
சிரித்து வந்த பூமுகத்தில் சித்திரம் கண்டு
சிதறுகின்றதே எம் நெஞ்சில் கண்ணீர் இன்று!
நீங்கள் கொண்ட செயல் கண்டு
பொறுக்கவில்லையே வஞ்சகர்களுக்கு அன்று
வாழ நினைத்தது உங்கள் மனம் அன்று
வாழ்வு முடிந்தது வஞ்சகர்களின் வஞ்சம் நின்று
ஏங்குதையா எம்மனம் இன்று!
இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் எம் இதயங்களில்
இருந்து உங்கள் நினைவுகளை மறைக்கவே முடியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர், மருமக்கள்.

7, சென்மேரிஸ் 2-ம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

(சி-6854)

## வாணி விழாவும், நூல் வெளியீடும்

இடம்: புதிய கல்வி நிலையம்,
219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 04-10-92 ஞாயிறு பிற்பகல் 2-00 மணி.

புதிய பாடத் திட்டத்திற்கு அமைய எழுதப்பட்ட "ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி" நூல் வெளியீடும் (தமிழ், கணிதம், மொழித்திறன்-விடைகளுடன்) வாணி விழாவும் நடைபெறும்.

பெற்றோர், ஆசிரியர், நலன் விரும்பிகள், மாணவர், பழைய மாணவர், அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(சி 6858) நிர்வாகம்.

## ★ குமரப்பா, புலேந்திரனின் அஞ்சலிக் கூட்டம் நாளை தீருவிலில்

(யாழ்ப்பாணம்)

இந்திய - இலங்கை அரசுகளின் சதி முயற்சிகளால் பாதிப்படைந்து 5-10-87ல் தங்களை தமிழ் மண்ணுக்காக தற்கொடையாளர்களாக்கிய லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் ஆகியோர் அடங்கிய பன்னிருவர்களை நினைவு கூரும் தினம் நாளை 5ம் திகதியாகும்.

இந்நாளில் சிற்றூர் வட்டம் கோட்டங்கள் மட்டங்களில் இவர்களுடைய தூபிகள், படங்கள் வைக்கப்பட்ட இடங்கள் புனிதப்படுத்தப்பட்டு மாலையிட்டு மலர்தூவி சுடரேற்றி நினைவுகூரும் வைபவங்கள் இடம்பெறும்.

பொதுஸ்தாபனங்கள், கிளை நிறுவனங்கள், விடுதலைப் புலிகள் இயக்கதுறை சார்ந்த நிலையங்கள் படங்கள் வைத்து, மாலையிட்டு, மலர்தூவி, சுடரேற்றி நினைவு நாளை கொண்டாடுமாறும் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றுமாறும் தமிழீழ விடுதலைப்புலிகள் மாவீரர் பணியகம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த பன்னிரு மாவீரர் நினைவுப் பொதுக்கூட்டம், தீருவில் மைதானத்தில் நாளை 5ம் திகதி பிற்பகல் 4-45 மணிக்கு இடம்பெறவுள்ளது. தமிழீழ மாவீரர் பணிமனை வெளியீடாக "தீருவில் தீ" என்னும் சுருக்க வரலாற்றின் வெளியீட்டு வைபவமும் இடம்பெறும். (சு)

## "ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டை நிரூபிக்காத பட்சத்தில் அரசியலிலிருந்து வெளியேறுவேன்" — கருணாநிதி

[சென்னை]

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாத பட்சத்தில் தாம் அரசியலிருந்து விலகப்போவதாக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்,

மேலும் அ.தி.மு.க வின் தவறான ஆட்சியிலிருந்து தமிழகத்தை விடுவிக்க தமிழக மக்கள் புரட்சியில் ஈடுபடவும் தயாராயிருக்க வேண்டும் என்றும் கோடிக்கணக்கான ரூபாய்களை தற்போதைய அ.அ.தி.மு.க கையாடும்போது நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

சென்னையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டார்.

இதேவேளை தமிழக முதல்வர் ஜெயலலிதா விடயம் தொடர்பாக தாம் உயர்நீதிமன்றம் வரை செல்லப்போவதாக திரு கருணாநிதி ஏற்கனவே அறிவித்தது தெரிந்ததே [ம]

## வடமராட்சியில் வயிற்றோட்டத்திற்கு சிறுமி பலி 20 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

[புலோலி]

வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, கொற்றாவத்தை ஆகிய இடங்களில் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 20 பேர் வல்வெட்டித்துறை இந்திராணி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வயிற்றோட்ட நோயாளர்களின் தொகை அதிகரித்துள்ளதனால் இவ்வைத்தியசாலையில் இதற்கென தனியான வார்ட் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆண்கள் பெண்கள் சிறுவர்கள் உள்ளிட்ட இந் நோயாளர்களுக்கு இங்கு உள்ள மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

வயிற்றோட்ட நோய்க்கு இலக்கானவர்களில் ஒரு சிறுமி வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் மரணமானார்.

சுகாதாரக்கேடான ஐஸ்கிறீம், சுத்திகரிக்கப்படாத உப்பு உணவில் கலந்து சாப்பிட்டமை போன்ற காரணங்களினாலேயே இவ்வயிற்றோட்ட நோய் தீவிரமாக பரவியதற்குக் காரணமாக இருக்கலாம் என வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (61)

## கப்பல் மூலம் திருமலைக்கு ஆயிரம் தமிழ் அகதிகள்

(சென்னை)

தமிழ்நாட்டிலிருந்து நேற்று முன்தினம் ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து இதுவரை 29 ஆயிரம் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும், இன்னும் 78 ஆயிரம் அகதிகள் தமிழ்நாட்டில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## மழையினால் பாதிக்கப்பட்ட அகதிகள் கைதடிக்கு இடம்பெயர்வு

(கொட்டடி)

மாதகல், இளவாலைப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து சங்கானைப் பகுதிகளில் தங்கியிருந்த பல குடும்பங்கள் தற்பொழுது பெய்துவரும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள சில குடும்பங்களை யாழ். செஞ்சிலுவைச்சங்க தலைமைக் கிளை நிர்வாகத்தினர் பொறுப்பெடுத்து கைதடியில் உள்ள ரபர் உற்பத்தி நிலைய கட்டிடத்தில் தங்கவைத்து மூன்று நாட்களுக்குப் போதுமான சமைத்த உணவு வகைகளை வழங்கியுள்ளனர்.

மேலும் கைதடிப் பகுதியில் அகதிகள் தங்கி இருப்பதற்காக 500 குடிசைகளையும் அமைக்கும்பணி நடைபெற்று வருகிறது.

அடுத்த வாரமளவில் அகதிகளாக இருக்கும் இம்மக்கள் அங்கு குடியமர்த்தப்பட்டுவிடுவார்கள் எனவும் அதன்பின் அவர்களுக்கு அரசாங்க அதிபர் மூலமாக நிவாரண உதவிகள் வழங்கப்படவிருப்பதாகவும் அதற்கான விபரங்களும் உடனடியாக தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (75)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 17 வயது, 19 வயதிற்கு இடைப்பட்ட மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்:

வடமராட்சிக் கோட்டம்: 19 வயது - தேவரையாளி இந்து எதிர் விக்னேஸ்வரா. பொன்னம்பலம் வி எதிர் உடுப்பிட்டி அ.மி. (நெல்லியடி ம.வி. மைதானம்) நெல்லியடி ம.வி எதிர் பொன்னம்பலம் வி (தேவரையாளி இந்து மைதானம்). (சி)

## ★ பொஸ்னியாவில் 10,000 குழந்தைகள் யுத்தத்தில் உயிரிழப்பு

லண்டன்

பொஸ்னியாவில் போர் தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை சுமார் 10,000 குழந்தைகள் உயிரிழந்தும் காணமலும் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறுமாத காலத்திலே இந்தக் குழந்தைகள் இறந்தும் காணமலும்போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பொஸ்வானியாவிற்கு மீண்டும் நாளை முதல் விமானங்களில் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. [வீ]

## இராசி பலன்

04-10-1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 18)

அட்டமி முற்பகல் 11-50 வரை. பூராடம் மாலை 6-41 வரை. சித்தஅமிர்தயோகம். இராகுகாலம் மாலை 4-32 முதல் 6-02 வரை. சுபநேரம் காலை 9-04 முதல் 10-32வரை. மகாநவமி

மேடம்: பண நஷ்டம். உடல் நலம் பாதிப்பு, கட்டுப்படுதல்.

இடபம்: மனக் கவலை, அஞ்ஞாதவாசம், தடுமாற்றம்.

மிதுனம்: பெண்கள் மூலம் நன்மை. மரியாதை. காரிய சித்தி.

கடகம்: சிநேகிதர் வரவு, சுபகாரியம், இனிய காட்சி.

சிங்கம்: காரியத் தடை, அஜீரணக் கோளாறு, அலைச்சல்

கன்னி; நமபிக்கை மோசம், பண நஷ்டம், விரோதம்.

துலாம்: நல்ல புகழ், தாய் அன்பு, காரியம் கைகூடல்.

விருச்சிகம்: அதிக செலவு, குடும்பக் கலகம். மனக்குறை.

தனுசு: பெரியோர் ஆசி, பயணம், வாக்கு வன்மை.

மகரம்: காரிய லாபம், தொழில் மதிப்பு, புதிய முதலீடு.

கும்பம்: திருமண யோகம், இனசன வருகை, தெய்வீகச் செலவு.

மீனம்: அதிகாரப் பதவி, வெகுமானம், மனமகிழ்ச்சி.

ஜோஸ்யர்

## தமிழக முதல்வர் மீது உடனடி விசாரணை வேண்டும் - ராஜாராம்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீது ஜனதா தள் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் அ.அ.தி.மு.க. பொதுச்செயலரும், முன்னாள் மாநில அமைச்சருமான ராஜாராம் மத்திய அரசைக் கேட்டுள்ளார்

சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் முதல்வர் ஜெயலலிதாவின் ராஜினாமாவை வலியுறுத்தும் வகையில் பிரசாரம் செய்யும் முகமாக ஓர் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## நாடாளுமன்றில் வரவு செலவு திட்டம் பிரதமர் சமர்ப்பிப்பார்

(கொழும்பு)

பிரதமரும் நிதியமைச்சருமான டி.பி விஜயதுங்கா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் 1993ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டு சட்ட மூலத்தைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

1993-ல் 3500 கோடி வெளிநாட்டு உதவி கிடைக்கவுள்ளதாக வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் வாணி விழா நல்லூரில் அமைந்துள்ள அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மண்டபத்தில் இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது

யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நாளை 5ம் திகதி மாலை 4 மணிக்கு மன்ற மண்டபத்தில் வித்தியாரம்பம் நடைபெற ஏற்பாடகியுள்ளதாகவும் தெரியவருகின்றது. (சு)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கரணவாய் மத்தி கருணையம்பதி சனசமூக நிலைய வாணிவிழா இன்று மாலை 6-00 மணி முதல் பண்டிதர் க. முத்துவேலு தலைமையில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

பூசைகள், சிறப்புச் சொற்பொழிவுகளை தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் நடனம், பாட்டு கச்சேரியும் பட்டிமன்றமும், பரிசளிப்பு விழாவும் நடைபெறும். இறுதியில் கொலின்ஸ் விளையாட்டு கழகம் வழங்கும் திரு. செந்தில்வேல் தயாரிப்பில் 'உணர்வுகள்' எனும் நாடகமும் இடம் பெறும். (சி)

0 0 0

[பருத்தித்துறை]

இலங்கை சைவமன்றத்தின் நவராத்திரிவிழா பருத்தித்துறை பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் இலங்கைச் சைவமன்றத்தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் இன்று 4-ம் திகதி நடைபெறுகின்றது. (52)

0 0 0

(யாழ்ப்பாணம்)

புதிய கல்வி நிலைய வாணி விழாவும் ஐந்தாண்டு புலமைப் பரிசில பயிற்சி நூல் வெளியீட்டு விழாவும் இன்று 04ந் திகதி ஞாயிறு பி. ப. 2-00 மணிக்கு கல்வி நிலைய இயக்குனர் தலைமையில் நடைபெறும்.

கல்வி நிலைய மாணவரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

(நல்லூர்)

நல்லூர் நாவலர்வீதி ஞான வைரவர் ஆலயத்தில் நவராத்திரி விழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது தினமும் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறுகின்றன. (158)

0 0 0

(யாழ்ப்பாணம்

சூராவத்தை முத்துமாரி அம்மன் கோவில் நவராத்திரி விழாவின் இன்றைய நிகழ்ச்சியாக 'மகிடாசுர மர்த்தனி' எனும் தலைப்பில் திரு வ. குமாரசுவாமி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். நாளை பி ப 3-00 மணிக்கு மானம்பூ உற்சவம் நடைபெறும். [சி]

0 0 0

[நெல்லியடி]

நெல்லியடி, மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை 5-ம் திகதி நவராத்திரி விழாவின் இறுதிநாள் விழா நடைபெறவிருக்கின்றது. (160)

0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் 5-ம் திகதி திங்கட்கிழமை விஜயதசமி விழா கொண்டாடப்படவுள்ளது.

வித்தியாலய இந்துமாமன்றத்தலைவர் திரு க கந்தசாமி உபஅதிபர் தலைமையில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளில் அதிபர் திரு. நா. க. தங்கரத்தினம், பண்டிதர் திரு. க. ஈஸ்வரநாதபிள்ளை. ஆசிரியமணி திரு கா. சின்னத்துரை, புலவர் திரு. கே. தேவதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இவ்விழாவில் மாணவர்களது பேச்சு, கவிதை, பாட்டு நடனம், நாடகம், பட்டி மன்றம், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (139)

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை உப்புக்குள வீதி நீர்நொச்சித்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் கோவிலில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

தினசரிபூசை முடிவில் குமரகுருபரசுவாமிகள் அருளிச் செய்த சகலகலாவல்லிமாலை 10 பாடல்களும் பாடப்படும். (154)

0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. (139)

## போலி ஏஜெண்டுகள் ஏமாற்று

# சிங்கப்பூரில் பரிதவிக்கும் இலங்கை இளைஞர், யுவதிகள்

(சிங்கப்பூர்)

இலங்கை இளைஞர்கள், யுவதிகள் பெருமளவு சிங்கப்பூரில் அனாதரவாகப் பரிதவிக்கும் நிலையில் உள்ளதாகவும் சிங்கப்பூரிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்குத் தினமும் அவர்கள் படையெடுத்தவண்ணம் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் பதிவு செய்யப்படாத வெளிநாட்டு முகவர்களிடம் 75 ஆயிரம் ரூபா முதல் 1 லட்சம் ரூபா வரை கொடுத்தபின் இவ்விளைஞர்கள் ஏமாற்றப்பட்டுச் சிங்கப்பூர் வரை அழைத்துச் செல்லப்பட்டு அனாதரவாக விட்டுவிட்டு முகவர்கள் மாயமாய் மறைந்துவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அண்மைக் காலமாகப் பெருமளவு தமிழ், சிங்கள இளைஞர், யுவதிகள் போலி ஏஜெண்டுகளினால் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும், ஏமாற்றுப் பேர்வழிகள் பல நாடுகளில் இவர்களைத் தவிக்கவிட்டுத் தப்பிவிடுவதாகவும் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிசார் அறிவுறுத்தியுள்ளனர். (க-சி)

## சார்க் நாடுகளின்

# தீவிரவாதத்தை ஒடுக்க இல.இந்தியா ஒத்துழைப்பு

(புதுடில்லி)

முறையான ஆலோசனைக் கலப்புகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கிடையே தகவல்களைப் பரிமாறிக்கொள்வது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் ''சார்க்'' அமைப்பு நாடுகள் தீவிரவாதத்தை ஒடுக்க முடியும் என இந்தியாவும், இலங்கையும் நம்புகிறது.

இந்தியாவுக்கு 3 நாள் விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் பயண முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டவையாவன:-

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் விடயத்தில் அகதிகளை விரைவாகவும் சீராகவும் அனுப்பிவைக்கத் தொடர்ந்து ஒத்துழைக்க இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

சார்க் அமைப்பு எல்லாத் துறைகளிலும் மிக முக்கியமானதெனவும் இருதலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். [கே]

## 13 வேங்கைகளுக்கும் மக்கள் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் கட்டைக்காட்டில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 13 வேங்கைகளுக்கும் யாழ். குடா நேற்று இறுதி அஞ்சலியைத் தெரிவித்தது.

யாழ். குடா எங்குமுள்ள வர்த்தக நிலையங்கள், வீதிகள், ஒழுங்கைகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் சோடனைகளும், வாழைகள், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன

13 வேங்கைகளின் புகழ் உடம்புகள் சுன்னாகம் பகுதியில் (சந்தையில்) புலிக்கொடி போர்த்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தது இங்கு பெரும் திரளான மக்கள் இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

புகழ் உடல்கள் பான்ட் இசையுடன் நேற்று பிரதான வீதிகளூடாக மக்கள் அஞ்சலிக்காக எடுத்துச்செல்லப்பட்டபோது மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மாலை 13 வேங்கைகளின் புகழ் உடம்புகளும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புதைக்கப்பட்டது. 56)

## நாளை ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் நாளை 5 ம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 6-ம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும், 7-ம் திகதி புதன்கிழமை திருக்கல்யாணத் திருவிழாவும்இடம்பெறும் [சு]

# பலாலி நோக்கி பொம்மர்கள் விரைவு

(யாழ்ப்பாணம்)

செ. பகுதியிலிருந்து பலாலி முகாம் நோக்கி நேற்று மாலை இரு பொம்மர்கள் சென்று தரையிறங்கியுள்ளன.

இதேவேளை நேற்றுமுழுவதும் குடாநாட்டின் பலபகுதியிலும் அவ்ரோ, வைரக விமானம், ஹெலிகொப்டர் பல தடவைகள் சென்று திரும்பிய வண்ணமிருந்ததைக் காணக்கூடியதாயிருந்தது.

# சிங்கள மக்கள் மத்தியில் தமிழரை குடியேற்ற முயற்சி

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா அரசு இடம்பெயர்ந்துள்ள மட்டக்களப்பு அகதிகளை அச்சம் நிறைந்த சிங்களவர் மத்தியில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது எனத் தெரியவருகின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

அம்பாறையில் சொறிக்கல் முனையில் அகதிகளைக் குடியமர்த்த இறுதி ஏற்பாடுகளை அரச அதிகாரிகள் செய்துவருகின்றனர்.

கல்முனை அருட்சகோதரர் இல்லத்தில் இரண்டு வருடங்களாக அகதிகளாகத் தங்கியுள்ள 400 குடும்பங்கள் அரச அதிகாரிகளினால் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

எனவே சிங்களவரின் அச்சுறுத்தல் உள்ள சொறிக்கல் முனையில் புதிதாக பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு, பெருமளவு பொலிசார் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே வீரமுனை என்ற கிராமத்தில் அக்கிராம மக்கள் அவர்கள் விருப்பின்றி பலாத்காரமாக கொண்டு சென்று குடியமர்த்தப்பட்டனர்.

சொறிக்கல்முனை இரண்டாவதாகும். இதையடுத்து காரைதீவில் மல்வத்தை, வரித்தாபிட்டி, மல்லிகைத்தீவு அகதிகளை அவர்களின் கிராமங்களில் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டு நிறுவனங்கள் வடக்கு-கிழக்கு மக்களின் புனர்வாழ்வுக்கென வழங்கும் பணத்தை தமிழர்களின் புனர்வாழ்வுக்கு செலவிடுவதாகக் காட்டுவதற்கு இவ்வாறு ஒரிரு கிராமங்களில் எவ்வித வசதிகளையும் கொடுக்காமல் வன்முறை, அச்சுறுத்தல் நிறைந்துள்ள பகுதிகளில் குடியமர்த்தி வருகின்றார்கள். (சு)

### வடக்கு-கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படும் என்றார். வடக்கு - கிழக்கு மக்களைப் பாதுகாக்க இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடத்தப்படும் என்றார்.

இதேவேளை நேற்று இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு டாக்கா புறப்படுமுன் திரு. பிரேமதாஸா புதுடில்லி விமான நிலயத்தில் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்தியாவுடன் இலங்கை அரசுக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை. தற்போதுள்ள உறவு மேலும் வலுப்படுத்தப்படும்.

இலங்கையில் புலிகள் ஆயுதங்களை உபயோகிப்பதையும், தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் நிறுத்த உடன்படவேண்டும் என்றும் கூறினார். (சி)

### ஒபரேஷன்

(4ம் பக்கம் பார்க்க)

தலைமையகம் தெரிவித்தது.

### ஊரடங்கு நீக்கம்

இதேவேளை இப்பகுதியில் போடப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவும் நேற்று மாலை 6 மணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [கே-சி]

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளில் இருதரப்புகளும் ஈடுபட்டுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாசா சார்பில் திரு. பிரட்மன் வீரக்கோனும் வெளியுறவுச் செயலர் போணுட் திலகரட்ணவும், விடுதலைபுலிகள் சார்பில் திரு. கிட்டு, திரு. திலகர் ஆகியோரும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்கின்றனர்.

இந்தநான்குபேரும்கொழும்பில் 3 நாட்கள் சந்தித்துள்ளனர்.

போர் நிறுத்தத்திற்கென இந்த நான்கு உறுப்பினர்களும் தயாரித்து இருக்கும் காரிய சாத்தியமான திட்டத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

★ இராணுவம் இப்போது நிறுத்தப்பட்டுள்ள இடங்களைத் தவிர புதிய இடங்களில் தளங்களை அமைப்பதோ, முகாம் நிறுவுவதோ கூடாது. மறைந்திருந்து தாக்குதலும் கைவிடப்படவேண்டும்.

★ பேச்சுவார்த்தை முக்கியமான கட்டத்தை அடைந்திருப்பதால் தொடர்ந்து இந்த 4 பேருமே இருக்கவேண்டும். புதுமுகங்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து வரக்கூடாது.

புலிகளின் திடீர்த் தாக்குதல்களால் இராணுவத்திற்கு பலத்த சேதமேற்படுவதால் பொதுமக்களிடையே இராணுவத்தின் மதிப்பு குறைந்து வருகிறது. எனவே தான இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு இந்தியா தடை விதித்திருப்பதால் இதுவிடயமாக இந்தியா கருத்துக்கூறுவது கடினமாகும் என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. (கே-சி)

### உதைபந்தாட்டம்:

## பாடும்மீன் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் குருநகர் பாடும்மீன் கழகம் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பாடும்மீன் கழகம் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்தை 3-1 என்ற கோல்கணக்கில் வென்று சாம்பியனாகியது. இப்போட்டிக்கு திரு ஜி. எம். செபஸ்ரியாம்பிள்ளை நடுவராக கடமையாற்றினர். (சி)

### மேஜர் முரளி

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டியில் இன்று காலை 9 மணிக்கு முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்குமான தாச்சிப்போட்டிகள் நடைபெறும்.

பி. ப. 3 மணிக்கு யாழ். மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்ட போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து உரும்பிராய் இந்துவும், நெல்லியடி ம. வி.யை எதிர்த்து ஹென்றியரசர் கல்லூரியும் மோதும். (சி)

### முன்னாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] கட்சியின் கட்டுப்பாடுகளை மீறிக் கட்சிக்கும் அரசுக்கும் களங்கமும், அவப்பெயரும் ஏற்படும்வகையில் நடந்து கொண்ட ராஜாராமை கட்சியிலிருந்து நீக்கவேண்டுமென்று தலைமைக்கழக நிர்வாகிகளும் அமைச்சர்களும் ஒன்றுகூடி நிறைவேற்றிய தீர்மானங்களை ஏற்று ராஜாராமை நீக்கியதாக அறிவித்திருக்கின்றார்.

இதற்குமுன்பு மாநில அமைச்சர்கள் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் 'கட்சியின் உறுப்பினரும், சட்டப் பேரவையில் அங்கம் வகிப்பவரான ராஜாராம், சுப்பிரமணியசுவாமியுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டதால் அவரை கட்சியின் அனைத்துப் பொறுப்புக்களிலிருந்து நீக்கவேண்டுமென்று கட்சியின் பொதுச்செயலாளர் ஜெயலலிதாவை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

### அச்சத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை என்ற பெயரில் இராணுவம் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களே இதற்கு காரணமாகும்.

தற்போது மடுவில் 29 ஆயிரம் அகதிகள் முகாம்களில் வாழ்கின்றனர். இவர்களிடையே தொற்றுநோய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தற்போதைய இராணுவ நடவடிக்கையாலும் அகதிகளின் வருகை அதிகரித்துள்ளது.

கடந்த வருட இறுதியில் 16 ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகளை மடு முகாமிலிருந்து தங்களுடைய சொந்த இடங்களில் சென்று குடியமர்ந்தனர்.

இவர்கள் தற்போது இடம் பெயர்ந்து மடுவுக்கு வரத் தொடங்கியுள்ளார்கள்.

இவர்கள் மீளக் குடியமர்ந்து செய்த விவசாயத்தையும் கைவிட்டுள்ளனர்.

இவர்களின் வருகையால் மடு முகாமில் நெருக்கடிகள் அதிகரிக்கின்றன.

### பிரபாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸா புதுடில்லியில் பத்திரிகையாளரிடம் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (கே-சி)

### இராணுவ தளபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒருவாரத்தில் பூநகரியிலும், கட்டைக்காட்டிலும் புலிகள் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு படையினருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### சொந்த இடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அகதிகள் சென்று அமரக்கூடிய இராணுவ ஆக்கிரமிப்பு இல்லாத இடங்களுக்குச் செல்ல அதிகாரிகளும், இராணுவத்தினரும் மறுத்து வருகின்றனர். இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியில் மேலும் 78,000 அகதிகளை இலங்கைக்குக் கொண்டுவர ஆயத்தங்கள் செய்யப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

### ஜெயலலிதாவை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒழுங்கு ஆகியவற்றை மோசமாக அனுமதித்தமை.

சுப்பிரமணியசுவாமி தலைமையிலான இந்தக் குழு மேற்படி குற்றங்களை சுமத்தியதோடு இன்று மாநில ஆளுநரைச் சந்தித்து செல்வி ஜெயலலிதாவுக்கு எதிரான லஞ்ச ஊழல் சம்பந்தமான மகஜரையும் சமர்ப்பிக்கவுள்ளது.

முதலமைச்சர் மீது வழக்குத் தொடரவும் இந்தக் குழு ஆளுநரிடம் அனுமதி பெறவுள்ளது.

இந்தக் குழுவில் சேர்த்த திண்டிவனம் அ. தி. மு. க சட்டமன்ற உறுப்பினர் ராஜாராம் கட்சியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். (கே)

### அநுரா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாலும் போட்டியிடலாம் எனக் கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் ஸ்ரீ. ல. சு. கட்சின் தலைவராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே தொடர்ந்தும் செயற்படுவார் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலிலிருந்து ஓய்வு பெறலாம் என்ற வதந்தி பரவலாக அடிபட்டது தெரிந்ததே. (க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் நிறுவனத்தார் சார்பில் யாழ்ப்பாணம் [illegible] 1992-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence number No B/16033